வரலாறு

# 1 இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்

## நினைவுக்குறிப்புகள்

- கி.பி 700 முதல் கி.பி 1200 வரையிலான காலப்பகுதி தொடக்க இடைக்காலமாகும்.
- இடைக்கால சான்றுகளை முதல்நிலைச் சான்றுகள், இரண்டாம் நிலைச் சான்றுகள் என வகைப்படுத்தப்படுகின்றன.
- கற்கள், பாறைகள், கோவில்சுவர்கள் ஆகியவற்றின் மீதுள்ள பொறிப்புகள், செப்புப்பட்டயங்கள் ஆகியவை தெளிவான சான்றுகள் ஆகும்.
- பிராமணர்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் பிரம்மதேயம் என அழைக்கப்படுகிறது.
- ஒரு ஜிட்டல் 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டதாகும்.
- தஜுக் – பாரசீகச் சொல் – இவை சுயசரிதை எனப் பொருளாகும்.
- 13 ஆம் நூற்றாண்டுத் தமிழகத்தில் பாண்டிய அரசு ஆட்சியின் போது வெனிஸ் நகரைச் சேர்ந்த பயணி மார்கோபோலோ வருகை புரிந்தார்.

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

### பாடநூல் வினாக்கள்

1. ________ என்பவை பாறைகள், கற்கள், கோவில்சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மீது செதுக்கப்படும் வாசகங்களாகும்.

அ) காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள் ஆ) பயணக்குறிப்புகள்
இ) நாணயங்கள் ஈ) பொறிப்புகள்

2. கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் ________ ஆகும்

அ) வேளாண்வகை ஆ) சாலபோகம்
இ) பிரம்மதேயம் ஈ) தேவதானம்

3. ________களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென அறியப்படுகிறது.

அ) சோழர் ஆ) பாண்டியர்
இ) ராஜபுத்திரர் ஈ) விஜயநகர அரசர்கள்

4. முதல் டெல்லி சுல்தான் பற்றிய தகவல்களைக் கூறும் நூல் ________ ஆகும்

அ) அயினி அக்பரி ஆ) தாஜ் – உல் – மா அசிர்
இ) தசுக் – இ – ஜாஹாங்கீரி ஈ) தாரிக் – இ – பெரிஷ்டா

5. அராபியாவில் பிறந்து இந்தியாவிற்கு வந்த மொராக்கோ நாட்டு அறிஞர் ________ ஆவார்

அ) மார்க்கோபோலோ ஆ) அல் – பரூனி
இ) டோமிங்கோ பயஸ் ஈ) இபன் பதூதா

## கூடுதல் வினாக்கள்

6. சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக அளிக்கப்பட்ட நிலங்கள் ________ என அழைக்கப்படுகிறது.
   அ) தேவதானம் ஆ) பள்ளிச்சந்தம்
   இ) வேளாண்வகை ஈ) சாலபோகம்

7. முதல் நிலை சான்றுகள் ________
   அ) நினைவுச்சின்னங்கள் ஆ) காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள்
   இ) பயணக்குறிப்புகள் ஈ) இலக்கியங்கள்

8. கொனார்க் கோவில் அமைந்துள்ள இடம் ________
   அ) மத்தியபிரதேசம் ஆ) இராஜஸ்தான்
   இ) தமிழ்நாடு ஈ) ஒடிசா

9. 'தேவாரம்' யாரால் இயற்றப்பட்டது.
   அ) நாதமுனி ஆ) சம்பந்தர்
   இ) நம்பியாண்டார் நம்பி ஈ) மாணிக்கவாசகர்

10. சரியான கூற்றை கண்டுபிடி.
    அ) 'அமுக்த மால்யதா' கங்கா தேவியால் இயற்றப்பட்டது.
    ஆ) 'மதுரா விஜயம்' பிருதிவிராஜாரால் இயற்றப்பட்டது.
    இ) 'ராஜதரங்கினி' கல்ஹணரால் எழுதப்பட்டது.
    ஈ) கிருஷ்ண தேவராயரால் சந்த்பார்தையின் கதை எழுதப்பட்டது.

11. பொருந்தாத சோடியை அல்லது (தவறான சோடியை கண்டுபிடி)
    அ) மார்க்கோ போலோ – வெனிஸ்
    ஆ) இபன் பதூதா – மொராக்கோ
    இ) டோமிங்கோ பயஸ் – இங்கிலாந்து
    ஈ) நிகோலோ கோண்டி – இத்தாலி

### விடைகள்

1. ஈ) பொறிப்புகள்
2. ஈ) தேவதானம்
3. அ) சோழர்
4. ஆ) தாஜ் – உல் – மா – அசிர்
5. ஈ) இபன் பதூதா
6. ஆ) பள்ளிச்சந்தம்
7. அ) நினைவுச் சின்னங்கள்
8. ஈ) ஒடிசா
9. ஆ) சம்பந்தர்
10. இ) "ராஜதரங்கிளி" கல்ஹணரால் எழுதப்பட்டது
11. இ) டோமிங்கோ பயஸ் – இங்கிலாந்து

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

### பாடநூல் வினாக்கள்

1. ________ கல்வெட்டு ஒரு பிரம்மதேயக் கிராமத்தின் நிர்வாகம் குறித்து விவரித்துக் கூறுகிறது.
2. தன்னுடைய தங்க நாணயங்கள் மீது பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதித்து தன்னுடைய பெயரையும் பொறித்தவர் ________ ஆவார்.

3. ஒரு ________ என்பது 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டிருந்தது.
4. அடிமை வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் நஸ்ருதீன் மாமூதுவால் ஆதரிக்கப்பட்டவர் ________ ஆவார்.
5. கி.பி 1420 இல் விஜயநகருக்கு வருகைபுரிந்த இத்தாலியப் பயணி ________ ஆவார்.

## கூடுதல் வினாக்கள்

6. கல்வி நிலையங்களைப் பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட நிலங்கள் ________ என அழைக்கப்படுகிறது.
7. 48 ஜிட்டல்கள் ________ வெள்ளி டங்காவுக்குச் சமமாகும்.
8. தாரிக் அல்லது தாகுயூக் என்ற அராபியச்சொல்லின் பொருள் ________ என்பதாகும்.
9. முகமது பின் துக்ளக் தலைநகரை டெல்லியிலிருந்து தெற்கே அமைந்திருந்த ________ க்கு மாற்றினார்

### விடைகள்

1. உத்திர மேரூர் 2. முகம்மது கோரி 3. ஜிட்டல் 4. மின்கஜ் உஸ் - சிராஜ்
5. நிகோலோ கோண்டி 6. சாலபோகம் 7. ஒரு 8. வரலாறு
9. தேவகிரிக்கு (அல்லது) தௌலதாபாத்.

## III. பொருத்துக:

### பாடநூல் வினாக்கள்

அ

| | | | |
|---|---|---|---|
| 1. | கஜுராகோ | அ. | ஒடிசா |
| 2. | கொனார்க் | ஆ. | ஹம்பி |
| 3. | தில்வாரா | இ. | மத்தியப்பிரதேசம் |
| 4. | விருப்பாக்சா | ஈ. | ராஜஸ்தான் |

விடை
1) இ
2) அ
3) ஈ
4) ஆ

## IV. சரியா? தவறா?:

### பாடநூல் வினாக்கள்

1. பள்ளிச்சந்தம் என்பது சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும்.
2. நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் அரசியல் நிலை குறித்த தகல்களை நமக்கு வழங்குகின்றன.
3. தாமிரத்தின் விலை அதிகமாக இருந்ததால் அரசு ஆணைகளையும் அரசவை நிகழ்வுகளையும் பதிவு செய்வதற்கு குறைந்த செலவிலான பனையோலைகளும் காகிதமும் பயன்படுத்தப்பட்டன.
4. டோமிங்கோ பயஸ் எனும் போர்த்துகீசியப்பயணி கி.பி 1522 இல் சோழப்பேரரசுக்கு வருகை புரிந்தார்.

### விடைகள்

1. சரி 2. தவறு 3. சரி 4. தவறு

## V. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க: பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்

### பாடநூல் வினாக்கள்

1. அ) கூற்று : முகமதுகோரி தனது தங்க நாணயங்களில் பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதிப்பித்தார்.

காரணம் : இத்துருக்கிய படையெடுப்பாளர் மத விசயங்களில் தாராள மனப்பான்மை கொண்டவராய் இருந்தார்.

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

இ) கூற்று தவறு, காரணம் சரி.

ஈ) கூற்று காரணம் இரண்டுமே தவறு.

**விடை:** அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

ஆ) தவறான இணையைக் கண்டறியவும்:

1) மதுரா விஜயம் – கங்காதேவி
2) அபுல் பாசல் – அயினி அக்பரி
3) இபன் பதூதா – தாகுயூக் – இ – ஹிந்த்
4) அமுக்தமால்யதா – கிருஷ்ணதேவராயர்

**விடை:** 3) இபன் பதூதா – தாகுயூக் – இ – ஹிந்த்

இ) பொருந்தாததைக் கண்டுபிடி:

பொறிப்புகள், பயணக்குறிப்புகள், நினைவுச் சின்னங்கள் நாணயங்கள்.

**விடை:** பயணக்குறிப்புகள்

## VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்:

### பாடநூல் வினாக்கள்

1. நாலாயிர திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?
   - நாலாயிர திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர் நாதமுனி ஆவார்.
2. 'தசுக்' எனும் வார்த்தையின் பொருள் யாது?
   - தசுக் என்பது பாரசீகச் சொல் இதன் பொருள் சுயசரிதை எனப்படும்.
3. ஜஹாங்கீர் எழுதிய நினைவுக் குறிப்பின் பெயர் என்ன?
   - ஜஹாங்கீர் எழுதிய நினைவுக் குறிப்பின் பெயர் "தசுக் – இ – ஜஹாங்கீர்".
4. வரலாற்றை அறிந்துகொள்வதற்கான இருவகைச் சான்றுகளைக் கூறுக.
   - முதல்நிலைச் சான்றுகள்.
   - இரண்டாம்நிலைச் சான்றுகள்.

TNPSCJOB



**5. இடைக்காலத்தில் கட்டப்பட்ட முக்கிய மசூதிகளையும், கோட்டைகளையும் பட்டியலிடவும்.**

மசூதிகள்

- குவ்வத் – உல் – இஸ்லாம் மசூதி
- மோத் – கி – மசூதி
- ஜமா மசூதி
- பதேப்பூர்ச்சிக்ரிதர்கா *சார்மினர்

கோட்டைகள்

- ஆக்ரா கோட்டை
- சித்தூர் கோட்டை
- குவாலியர் கோட்டை
- டெல்லி செங்கோட்டை மேலும் தௌலதாபாத் (ஔரங்காபாத்).

**6. இடைக்காலத்தில் இந்தியாவிற்கு வருகைதந்த முக்கியமான அயல்நாட்டுப் பயணிகளின் பெயர்களைக் கூறவும்.**

மார்க்கோபோலோ, அல் – வருணி, இபன் பதூதா, நிகோலோகோண்டி, அப்துல் ரஸாக், டோமிங்கோ பயஸ்

## கூடுதல் வினாக்கள்

**7. சில முதல்நிலைச் சான்றுகளை குறிப்பிடவும்.**

- பொறிப்புகள்
- நினைவுச்சின்னங்கள்
- நாணயங்கள்

**8. பொறிப்புகள் என்றால் என்ன?**

பொறிப்புகள் என்பன பாறைகள், கற்கள், கோயிற்சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மேல் பொறிக்கப்படும் எழுத்துக்களாகும்.

**9. பிற்காலச் சோழர்கள் காலத்தில் வெளியிடப்பட்ட பல செப்புப்பட்டயக் கொடை ஆவணங்களை குறிப்பிடவும்.**

- முதலாம் ராஜேந்திர சோழனின் திருவாலங்காடு செப்பேடு.
- சுந்தரச் சோழனின் அன்பில் செப்பேடுகளும் குறிப்பிட்ட எடுத்துகாட்டுகளாகும்.

**10. மார்க்கோபோலோ பற்றி சிறுகுறிப்பு வரைக.**

- 13 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் பாண்டிய அரசு ஆட்சியின் போது வெனிஸ் நகரைச் சேர்ந்த பயணி மார்க்கோபோலோ வருகை புரிந்தார்.
- அவர் தமிழகத்தில் காயல் எனும் தூத்துக்குடி துறைமுகத்திற்கு ஊருக்கு இருமுறை வந்துள்ளார்.

## VII. விரிவான விடையளி:

## பாடநூல் வினாக்கள்

**1. டெல்லி சுல்தான்கள் அறிமுகம் செய்த பலவகைப்பட்ட நாணயங்களை விவரிக்கவும்.**

- முகமதுகோரி தான் வெளியிட்ட தங்க நாணயத்தில் பெண் தெய்வமான இலட்சுமியின் வடிவத்தைப் பதிப்பித்துத் தனது பெயரையும் பொறிக்க செய்திருந்தார்.
- இந்நாணயம், இந்தத் தொடக்ககாலத் துருக்கியப் படையெடுப்பாளர் மதவிசயங்களில் தாராளத் தன்மையுடன் நடந்துகொண்டார் என்பதற்கான அனைத்துச் சாத்தியக் கூறுகளையும் உணர்த்துகிறது.



TNPSCJOB | www.tnpscjob.com

- டெல்லி சுல்தான்களின் காலகட்டத்தை அறிந்து கொள்ள 'ஜிட்டல்' என்னும் செப்பு நாணயங்கள் பயன்படுகின்றன,
- இல்துமிஷ் அறிமுகம் செய்த 'டங்கா' எனப்படும். வெள்ளி நாணயங்கள், அலாவுதீன் கில்ஜியின் தங்க நாணயங்கள், முகமது பின் துக்ளக்கின் செப்பு நாணயங்கள் போன்றவை நாணயங்கள் பரவலாக பயன்பாட்டில் இருந்ததையும் நாட்டின் பொருளாதார வளம் அல்லது நலிவு ஆகியவற்றைச் சுட்டுவதாகவும் அமைந்தது.

## VIII. கட்டக வினாக்கள்:

| | |
|---|---|
| 1. ________ பேரரசர் ஔரங்கசீப்பின் அரசவை அறிஞர் ஆவார். விடை : காஃபிகான் | 2. திருவாலங்காடு செப்பேடுகள் ________ காலத்தைச் சேர்ந்ததாகும். விடை : முதலாம் ராஜேந்திர சோழன் |
| 3. ________ என்பது கல்விக் கூடங்களைப் பராமரிப்பதற்கான நிலமாகும். விடை : சாலபோகம் | 4. பெரியபுராணத்தைத் தொகுத்தவர் ________ ஆவார் விடை : சேக்கிழார் |
| 5. ________ ஓர் அராபியச் சொல் இதன் பொருள் 'வரலாறு' என்பதாகும். விடை : தாரிக் அல்லது தாகு யூக் | 6. முகமதுபின் துக்ளக் தனது தலைநகரை டெல்லியிலிருந்து தெற்கே அமைந்திருந்த ________ க்கு மாற்றினார். விடை : தேவகிரிக்கு [தௌலதாபாத்] |

## IX. உயர் சிந்தனை வினா:

### பாடநூல் வினாக்கள்

**1. நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதாரச் செழிப்பைச் சுட்டிக்காட்டுகிறது" விளக்குக.**

- நாணயங்களில் உள்ள உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதார நிலை குறித்த செய்திகளை வழங்குகின்றன.
- அரசர்களின் இராணுவப் படையெடுப்புகள், பிரதேச விரிவாக்கம், வணிகத் தொடர்புகள், சமய நம்பிக்கைகள் போன்றவையும் நாணயங்களில் இடம் பெற்றுள்ளன.

❀ ❀ ❀ ❀ ❀